

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள், அண்ணல் காந்தியடிகளின் 148-வது பிறந்தநாளை முன்னிட்டு, நாகர்கோவில் அண்ணா பேருந்து நிலையம் அருகில் உள்ள கதர் அங்காடியில் தீபாவளி சிறப்பு கதர் விற்பனையை இன்று (02.10.2016) குத்துவிளக்கேற்றி, முதல் விற்பனையை துவக்கி வைத்தார்.

செ.வெ.எண்: 690 /2016 நாள்: 02.10.2016

# அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாள் விழா மற்றும் கதர் சிறப்புத் தள்ளுபடி விற்பனை துவக்க விழா

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பாக அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாள் விழா மற்றும் தீபாவளி சிறப்பு கதர் விற்பனை தொடக்க விழா, நாகர்கோவில் அண்ணா பேருந்து நிலையம் அருகிலுள்ள காமராஜர் கட்டிடத்தில் உள்ள கதர் அங்காடியில் இன்று 02.10.2016 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையேற்று, அண்ணல் காந்தியடிகளின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து, தீபாவளி சிறப்பு முதல் கதர் விற்பனையை துவங்கி வைத்தார்கள்.

விழாவில், கதர் கிராமத் தொழில் உதவி இயக்குநர் சுரேஷ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ப.காந்தி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு.சையத் முஹம்மத், கண்காணிப்பாளர் எபநேசர், கதர் ஆய்வாளர்(பொறுப்பு) மனோகரதாஸ், கதர் வாரிய பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் நாகர்கோவில், கன்னியாகுமரி, கருங்கல், அருமனை, குளச்சல், மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் கதர் விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மேலும், அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலும் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பணிமனைகளிலும் தரமிக்க கதர் வேஷ்டிகள், துண்டு ரகங்கள், ரெடிமேட் சட்டைகள், மெத்தை, தலையணைகள், கண்கவரும் கதர் பட்டு ரகங்கள், கதர் பாலியஸ்டர் மற்றும் உல்லன் ஆகிய ரகங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதற்காக மத்திய, மாநில அரசுகளின் உதவி பெற்று **அனைத்து ரகங்களுக்கும் 30% சிறப்பு தள்ளுபடி** அனுமதிக்கப்படுகிறது.

அரசு துறைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மாத ஊதியத்தில் 10 சம தவணைகளில் பெற்றிடும் வகையில் கடனுக்கும் கதர் ரகங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பொது மக்கள் மற்றும் அரசுத் துறை ஊழியர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் தீபாவளி வரை எல்லா நாட்களிலும் கதர் அங்காடிகள் செயல்படும்.

இந்த ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருடாந்திர கதர் விற்பனைக் குறியீடாக **ரூ.150.00 இலட்சமும்**, தீபாவளி சிறப்பு விற்பனை குறியீடாக ரூ.90.00 இலட்சமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக் குறியீட்டினை அடைந்திட பொதுமக்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியப் பெருமக்கள் உள்ளிட்ட அனைவரும் ஒத்துழைப்பு நல்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.

.